

நாமக்கல் மேற்கு மாவட்டம் வேலூர் பேரூர் பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சியிலிருந்து 200 க்கும் மேற்பட்டோர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் பரமத்தி வேலூர் பேரூர் கழகச் செயலாளர் முருகன், கபிலர்மலை ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.கே.சண்முகம், ஏ.பி.ஆர்.சண்முகம்மற்றும் பேரூர் கழக செயலாளர் மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான புதிய கட்டட கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதனைத்தொடர்ந்து ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான புதிய கட்டட கட்டுமானப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.28.83 கோடியில் திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் திறந்து வைத்தார்!

அரியலூர், பிப். 29 - அரியலூர் மாவட்டத்தில், வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையம், துணை வேளாண் விரிவாக்க மையம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் துணை மின் நிலையங்கள், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலகம் என ரூ.28.83 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக நேற்று முன்தினம் (27.02.2024) திறந்து வைத்தார்கள். மேலும், ரூ.16.40 கோடி மதிப்பீட்டில் உயர் கல்வித்துறையின் சார்பில் ஜெயங் கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான புதிய கட்டட கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அதனைத்தொடர்ந்து, ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நீர்வளத் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, உயர்கல்வித் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, உள்ளிட்ட துறைகளின் சார்பில் 8,801 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற திட்டப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, நீர்வளத் துறை, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம், உயர்கல்வித் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், உள்ளிட்ட துறைகளின் சார்பில் 1,615 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

அந்த வகையில் அரியலூர் மாவட்டம், வேளாண்மை உழவர் நலத் துறையின் சார்பில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் அரியலூரில் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையத்தினையும், அசாவீரன்குடிகாடு கிராமத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் துணை வேளாண் விரிவாக்க மையத்தினையும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் சார்பில் இலந்தைகூடம் (திருமழபாடி) கிராமத்தில் ரூ.22.32 கோடி மதிப்பீட்டில் 110/22 kV துணை மின் நிலையத்தினையும், பெரியகருக்கை கிராமத்தில் ரூ.4.01 கோடி மதிப்பீட்டில் 33 kV துணை மின் நிலையத்தினையும், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் அரியலூரில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அலுவலகம் என மொத்தம் என ரூ.28.83 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

மேலும், உயர்கல்வித்துறையின் சார்பில், ஜெயங்கொண்டத்தில் ரூ.16.40 கோடி மதிப்பீட்டில் ஜெயங்கொண்டம் அரசு கலைக் மற்றும் அறிவியல் கல்லூரிக்கு தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் என மொத்தம் 50,000 சதுர அடி பரப்பளவிலான புதிய கட்டட கட்டுமான பணிகளுக்கு தமிழ்நாடு முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சித் முகமைத் திட்ட இயக்குநர், கங்காதாரிணி, வருவாய் கோட்டாட்சியர் உடையார்பாளையம் ஷீஜா, உதவி செயற்பொறியாளர் கட்டடம் வரதராஜன், உதவி பொறியாளர் கார்த்திக், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் ரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிர மணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், ஆர் .கலியபெருமாள், நகரகழக செயலாளர் வெ.கொ.கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர்கள், சி.ஆர்.எம்.பொய்யாமொழி, வி.எம்.ஷாஜகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் என். ஆர்.இராமதுரை, எஸ்.ஆர். இராமராஜன், எம்.ஜி.இராஜேந்திரன், பானுமதி இராஜேந்திரன், இராஜமாணிக்கம், முரசொலிகுமார், பிரபாகரன்,பா. ரமேஷ், நாகராஜன், பிரகாஷ், ரமேஷ், ஞானபிரகாசம், பாலமுருகன், சிவா, நடராஜன், செ.வெற்றிசெல்வன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், ஆனந்த், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

# கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் கோரிக்கை மனுக்களை வழங்குவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், பிப். 29 - தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, 2024 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் கருத்துக் கேட்புக் கூட்டம் 02-03-2024 சனிக்கிழமையன்று காலை 9.00 மணியளவில் விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளதால், கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் தங்களது பகுதி கோரிக்கைகள், பரிந்துரைகளை நேரில் வந்து வழங்குமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்து ள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, வருகின்ற 2024ல் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக விவசாய அணி செயலாளர் - தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே. எஸ்.விஜயன், தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர், கழக சொத்து பாதுகாப்புக்குழு செயலாளர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், தொழில் துறை அமைச்சர், கழக தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி. இராஜா, அரசு கொறடா - கோவி.செழியன், கே.ஆர். என்.இராஜேஷ்குமார் எம்.பி., மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி., மருத்துவர் அணி செயலாளர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மேயர் பிரியா ஆகியோர் முன்னிலையில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துக் கேட்புக் கூட்டம் வருகின்ற 2.03.2024 (சனிக்கிழமை) காலை 9.00 மணியளவில் விழுப்புரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு ஊழியர் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், தொழில் முனைவோர், மீனவர் சங்கங்கள், நெசவாளர்கள், பொதுநல சங்கங்கள், வணிக அமைப்புகள், மாணவர் சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், இளைஞர்கள், விவசாய அமைப்புகள், தொழிலாளர் அமைப்புகள், தோழமை இயக்கத்தினர், மற்றும் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, வட்டம், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஒன்றிய குழுத் தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவர் அணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு தேர்தல் அறிக்கையில் சேர்க்க வேண்டிய, தங்கள் பகுதிகளில் உள்ள பொதுவான பிரச்சினைகளையும் அதற்கான தீர்வு குறித்து தங்கள் கோரிக்கைகளை கடிதம் மூலமாக நேரில் வந்து தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினரிடம் தாங்கள் வழங்கும் கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகளின் நகலை மாவட்ட கழகத்திடமும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச்செயலாளர் - அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### நாமக்கல் மாவட்டம்

# ரூ.5 கோடி மதிப்பீட்டில் 601 வீட்டுமனைப் பட்டாக்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், பிப். 29 - நாமக்கல் மாவட்டம் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அத்தனூர் ஸ்ரீ பாலாஜி மஹாலில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் நடைபெற்ற சிறப்பு பட்டா வழங்கும் முகாமில், இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரு மான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், கலந்துகொண்டு ரூ.5 கோடி மதிப்பில் 601 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் சீரிய முயற்சி யினால் நாமக்கல் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளி களுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப் பட்டு வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியினால், இராசிபுரம் பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில் ரூ.854 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள், 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 523 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி உள்ளார். இதன் மூலம் இப்பகுதி மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படும். இதுபோல மக்கள் நலனுக்காக ஒவ்வொரு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்.

வீடற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதியினை உறுதி செய்யும் வகையில் வருவாய்த் துறையின் மூலம் தகுதியான பயனாளிகளுக்கு அரசு வழிமுறைகளை பின்பற்றி இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த மே 2021 முதல் நாளதுவரை 13,570 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இன்றைய தினம் ரூ.5 கோடி மதிப்பில் 601 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்படுகிறது என கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் கே.பி.ஜெகநாதன், இராசிபுரம் நகர் மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் (வெண்ணந்தூர்) ஏ.ஆர். துரைசாமி, வெண்ணந்தூர் பேரூராட்சி தலைவர் எஸ். ராஜேஸ், வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் ஆர்.எம்.துரைசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் (பொ) த.முத்துராம லிங்கம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வெ.முருகன், இராசிபுரம் வட்டாட்சியர் சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியம் மற்றும் வேளாங்கண்ணி பேரூர் தி.மு.க. சார்பில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் பிரச்சாரத்திற்கான ஒன்றிய, பேரூர் கழக கூட்டம் திருப்பூண்டியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்வேளூர் சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செலயாளருமான கே.ஆர்.என்.போஸ் பேசினார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், கீழையூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட பிரதிநிதி மு.ப.ஞானசேகரன் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.உதயக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

### சேலம் கிழக்கு மாவட்டம் முழுவதும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா! நல உதவிகள் வழங்கல்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!



சேலம், பிப். 29 - சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மார்ச்1 கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் பிறந்தநாள் தமிழின தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த கொடை தான் நம்முடைய கழகத் தலைவர் தளபதியார் உழைப்பு உழைப்பு என ஒய்வறியா தலைவராக திகழும் தலைவர் அவர்கள் இளமை காலம் தொட்டே கழகம் வளர்க்க ஈடுப்பட்டவர் இளைஞரணி துவங்கி பட்டித் தொட்டி எங்கும் கழக கொடி உயர்த்தியவர் மிசா எனும் நெருப்பாற்றில் நீந்தியவர் சட்டமன்ற உறுப்பினராய் மாநகர மேயராய் உள்ளாட்சி துறை அமைச்சராய் துணை முதல்வராய் திறம்பட செயல்பட்டதை நாடும் ஏடும் நன்கறியும் கழக இளைஞரணி செயலாளர், துணைப் பொதுச் செயலாளர் ,பொருளாளர் ,செயல் தலைவர் ,என கழகத் தலைவராய் பரிணாம வளர்ச்சி பெற்றவர் மக்கள் துயதருற்ற போதெல்லாம் நேசக்கரம் நீட்டியவர், தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தழிழனத் தலைவர் கலைஞர் வழியில் தலைவரின் செயல்பாடுகள் துளி அளவும் பிசகாத கொள்கை முழக்கங்கள் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று மக்களைச் சந்தித்து எதிர்க் கட்சியின் தவறுகளை சுட்டிக் காட்டி திகைப்பில் ஆழ்த்தும் தலைவரின் பிறந்த நாளை பட்டித் தொட்டி எங்கும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடிட சேலம் கிழக்கு மாவட்டம் சார்பில் நகர,ஒன்றிய ,பேரூர்,ஊர்கிளை ,உட்கிளை தோறும் கழகக் கொடி உயர்த்தி இனிப்புகள் வழங்கி ,நலத்திட்டங்கள் உதவிகள் செய்து கொண்டாடிட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ,முன்னாள் எம்.எல். ஏக்.கள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், நகர, ஒன்றிய,பேரூர் செயலாளர்கள் ,உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள்,வார்டு கவுன் சிலர்கள்,மற்றும் இளைஞரணி,மாணவரணி,மகளிரணி,வழக்கறிஞரணி, பொறியாளாரணி,மகளிர் தொண்டரணி,தகவல் தொழில் நுட்ப அணி, விவசாய அணி, சுற்றுச் சூழல் அணி, விளையாட்டு மேம்பாடு அணி, அனைவரும் அவரவர் பகுதிகளில் ஏற்பாடு செய்து கொண்டாடிட வேண்டும். இவ்வாறு கிழக்கு மாவட்டக்கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைப்படி,தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர்.எம்வீடி.கோபால் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி ஜிட்டாண்டஹள்ளி ஊராட்சியில் திராவிட மாடல் அரசின் 3 ஆண்டு சாதனைகள்,நிதி நிலை அறிக்கை சிறப்பு அம்சங்கள் விவரங்களை அடங்கிய துண்டு பிரசுரங்களை இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் நிகழ்வில் வீடு வீடாகச் சென்று வழங்கி கழக அரசின் சாதனைகளை விளக்கினார்.உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.